# ரோஜாக் கூட்டம்



ஏ.சீ. ஜரீனா முஸ்தபா

දුරකථන/தொலைபேசி இல./Telephone Nos.

අමාත්‍ය / அமைச்சர் / Minister } 2784832 / 2784807 / 27856?7

ලේකම් / செயலாளர் / Secretary } 2784812

කාර්යාලය / அலுவலகம் / Office } 2785141-50 / Fax 2784846

විද්‍යුත් තැපෑල – மின்னஞ்சல்/E-mail isurupaya@moe.gov.lk

ඔබේ අංකය / உமது இல. / Your No }



අධ්‍යාපන අමාත්‍යාංශය
கல்வி அமைச்சு
**Ministry of Education**

ඉසුරුපාය, ශ්‍රී ජයවර්ධනපුර කෝට්ටේ
බත්තරමුල්ල
இசுருபாய, ஸ்ரீ ஜயவர்த்தனபுர கோட்டை
பத்தரமுல்ல
"Isurupaya", Sri Jayawardhanapura Kotte
Battaramulla


මගේ අංකය / எமது இல. / My No } EPAB/2/87?7.

දිනය / திகதி / Date } 2015. 08. 11.

வண./திரு./திருமதி.
ஏ. சீ. ஜரீனா முஸ்தபா

ரோஜாக் கூட்டம்

தங்களால் இச் சபைக்கு சமர்ப்பிக்கப்பட்ட மேற்கூறப்பட்ட புத்தகத்தை நூலகப் புத்தகமாக பாடசாலைப்பயன்பாட்டிற்காக அங்கீகரிக்கிறேன்.

02. இதனுடன் அனுப்பப்பட்டுள்ள அனுமதிப்பத்திரம் அரச இலச்சனையுடன் வழங்கப்பட்டுள்ள மாதிரிப் படிவத்திற்கமைய புத்தகத்தின் முதல் பக்கத்தில் தெளிவாக தென்படக் கூடிய இடத்தில் காட்சிப்படுத்த வேண்டும் இவ் அனுமதிப் பத்திரத்தை பிரசுரக்காது இருப்பது தவறான செயற்பாடு என்பதை கருத்திற் கொள்ளவும்.

03. அனுமதிப்பத்திரம் அச்சிடப்பட்ட மேற்கூறப்பட்ட புத்தகத்தின் பிரதியை ஆவணப்படுத்துவதற்காக இச் சபைக்கு தாமதம் இன்றி சமர்ப்பிக்க வேண்டும்.

04. இவ் அனுமதிப்பத்திரத்தின் செல்லுபடியாகும் காலம் 2015.08.09ம் திகதியுடன் முடிவடையும் என்பதுடன் அதற்குப் பின்னர் மீண்டும் சபைக்கு சமர்ப்பிக்க வேண்டும் என்பதை மேலும் அறிவிக்கிறேன்.
அச்சிடும் போது மறுசீரமைப்புக்களை உள்ளடக்கப்பட வேண்டும்

விஜித வெலகெதர
செயலாளர்
கல்வி நூல் வெளியீட்டு ஆலோசனை சபை

**VIJITHA WELAGEDARA**
**Secretary**
**Educational Publication**
**Advisory Board**
**Ministry of Education**
**"Isurupaya" Battaramulla.**

---

**கல்வி அமைச்சு**
**அனுமதிப்பத்திரம்**

புத்தகத்தின் பெயர் ரோஜாக் கூட்டம் அனுமதிப்பத்திர இலக்கம் கெநூவெ/2/87?7

நூலாசிரியர் ஏ. சீ. ஜரீனா முஸ்தபா

1952 பெப்ரவரி மாதம் 29ம் திகதி வெளியிடப்பட்ட இலங்கை அரசின் வர்த்தமான அறிவித்தலில் பிரசுரமான உதவி நன்கொடை பெறும் சுய மொழி இரட்டை மொழி மற்றும் ஆங்கிலம் பாடசாலை தொடர்பான பிரமாணக் குறிப்பின் 19/ஏ வாசகத்தின் கீழ் கல்விப் பணிப்பாளர் நாயகத்தினால் பாடசாலை நூலகப் புத்தகமாக அனுமதிக்கப்பட்டுள்ளது.

விஜித வெலகெதர
செயலாளர்
கல்வி நூல் வெளியீட்டு ஆலோசனை சபை

2010.08. மாதம் 10.
கல்வி அமைச்சு இசுருபாய பத்தரமுல்ல
அனுமத்திரம் செல்லுபடியாகும் திகதி 2015.08.09.

# ரோஜாக் கூட்டம்

## சிறுவர் கதைகள்



ஏ.சீ ஜரீனா முஸ்தபா

வெளியீடு

ACMI Padhippaham

எக்மி பதிப்பகம்
19, கமந்தெனிய வீதி,
கிரிங்கதெனிய, மாவனல்லை, இலங்கை.
தொ.பேசி 035 2246494 - 071 8396397
Gmail: acmipublication@gmail.com

# ரோஜாக் கூட்டம்

## சிறுவர் கதைகள்

## ஏ.சீ ஜரீனா முஸ்தபா

வெளியீடு

ACMI Padhippaham

எக்மி பதிப்பகம்
19, கமந்தெனிய வீதி,
கிரிங்கதெனிய, மாவனல்லை, இலங்கை.
தொ.பேசி 035 2246494 - 071 8396397
Gmail: acmipublication@gmail.com

| | | |
|---|---|---|
| நூலின் பெயர் | : | ரோஜாக் கூட்டம் |
| ஆசிரியர் | : | ஏ.சீ.ஜரீனா முஸ்தபா |
| உரிமை | : | ஆசிரியருக்கு |
| ISBN | : | 978-955-1825-08-9 |
| முகவரி | : | 120/H, போகஹவத்தை, வெளிவிட்ட, கடுவெல |
| தொலைபேசி | : | 011 5020936 |
| விலை | : | 150/- |
| முதற்பதிப்பு | : | 2011 ஏப்ரல் |
| கணனி எழுத்து | : | அபூ அஷ்பாக் |
| வெளியீடு | : | எக்மி பதிப்பகம் |
| அட்டைப்படம் | : | அஷ்பாக் அஹமட் |

| | | |
|---|---|---|
| Title | : | Roja Koottam |
| Author | : | A.C.Jareena Musthafa |
| Address | : | 120/H, Bokahawatha, Welivitta, Kaduwela. |
| Telephone | : | 011 5020936 |
| Copy Right | : | Author |
| ISBN | : | 978-955-1825-08-9 |
| Price | : | 150/- |
| First Edition | : | April 2011 |
| Type Setting | : | Abu Ashfaq |
| Publish | : | ACMI PATHIPPAHAM |
| Printed By | : | Fast Grapics, 31G, Hassan Mawatha, Mawanella. |
| Cover Page | : | Ashfak Ahamed |

# சமர்ப்பணம்

இந்நூல்
நம் பேரக் குழந்தைகளாகிய
மொஹமட் ஹபீல்,
முஹம்மட் அஹ்னாப்,
மொஹம்மட் ஹபீப்
மற்றும்
உலகில் உள்ள சகல மாணவ
மாணவிகளுக்காகவும்
அன்புடன்
சமர்ப்பணம் செய்கின்றேன்

# ஆசிரியர் உரை

இன்றைய சந்ததிகளே நாளைய சமுதாயம்

பாடசாலைகளில் நல்லவைகளை கற்றுக் கொடுப்பதுண்டு. ஆனால் சமூக சூழல்கள் அவர்களைத் தவறான பாதைக்கு இட்டுச் செல்கின்றன. அவர்கள் நல்லவர்களாக வளரவும், வாழவும் நல்ல சூழல்களும், சூழ்நிலைகளும் அவசியமாகிறது. அவற்றுக்கு பெற்றோர்களின் பங்களிப்பு மிக மிக அவசியம். பாடசாலைகளில் கற்பிப்பவை மாத்திரம் நல்ல சந்ததிகள் உருவாக போதுமாகாது. பெற்றோர்களின் நன் நடத்தைகளும், நல்ல மும்மாதிரிகளுமே இளைய சந்ததிகளுக்கு நல்வழி காட்டவும் தீயவற்றை விட்டும் ஒதுங்கிக் கொள்ளவும் உதவியாக இருக்கும். இந்தக் கருத்திலேயே இங்கு சில கதைகளைத் தந்துள்ளேன். முதலில் தமது ஆசைகளுக்கு அடிமையாவதை தவிர்த்துக் கொள்ள வேண்டும். அது கல்விக்கு பெரும் பாதிப்பை ஏற்படுத்தும். எனவே நல்ல முறையில் சிந்தித்து செயற்படுகிறவர்களாக வாழ்ந்து, நல்ல சமுதாயத்தை உருவாக்க வேண்டுமென்று மாணவ சமுதாயம் உறுதி கொள்ள வேண்டும்.

அன்புடன்,

ஏ.சீ ஜரீனா முஸ்தபா
A.C Jareena Musthafa
No :- 120 H, Boogahawatta Road,
Welivita, Kaduwela.
TEL : 011 5020936





## 1 உண்மையான நட்பு

"குணாபொல" என்ற பெயரில் ஒரு கிராமம் இருந்தது. அங்கே குமார் என்று ஒரு சிறுவன் நான்காம் ஆண்டில் கல்வி கற்றுக் கொண்டிருந்தான். அவனுடைய பாட்டனார் பெரிய கோடீஸ்வரர். நிறைய நிலங்களுக்கு சொந்தக்காரர். விவசாயம் செய்வது அவரது தொழில். நிறைய மரக்கறி வகைகளும், வெங்காயம், தக்காளி, கிழங்கு வகைகளையும் செய்து பல இடங்களுக்கும் கொள்வனவு செய்து வந்தார்.

அவரிடம் நிறைய பணியாளர்கள் பணிபுரிந்து வந்தனர். குமாருடைய தாயும், தந்தையும் ஒரு விபத்தில் இறந்து விட்டதால், அந்தக் குறைகள் தெரியாவண்ணம் நிறைய செல்லம் கொடுத்து வளர்த்தார் பாட்டனார். இதன் காரணத்தால் குமார் அதிகக் குழப்படிக்காரனாக வளர்ந்து விட்டான்.

குமார் எது கேட்டாலும் வாங்கிக்

கொடுத்தார். எதைச் சொன்னாலும் செய்து வந்தார். அவன் பாடசாலையில் யாருக்கும் பயப்படுவதில்லை. ஆசிரியர், அதிபருக்கும் மரியாதை செய்வதில்லை. எது பற்றியும் கவலைப்படுவதுமில்லை.

அவன் தாய் இருந்திருந்தால் ஆதரித்து, அரவணைத்து நல்லது கெட்டதுகளைச் சொல்லிக் கொடுத்திருப்பாள். ஒரு தாய் இல்லாத குறையை யாராலும் ஈடு செய்ய முடியாது. அவனை ஆதரித்து, அரவணைத்துக் கொள்ளவும் யாரும் இருக்கவில்லை. தாத்தாவுடைய காலமும் விவசாயத்தில் கழிந்தது.

வேலைக்காரர்கள் சமைத்துக் கொடுப்பார்கள். அவனுக்கு எப்படி வாழ வேண்டும் என்பது தெரியவில்லை. சில தீய நண்பர்களுடைய சகவாசத்தினால் அவனும் வழி தவறிப்போனான். தினமும் பாடசாலைப் பிள்ளைகளோடு சண்டை போடுவான். பாடசாலையில் நடக்கின்ற எல்லா சண்டைகளிலும், குழப்பங்களிலும் அவனது தலையீடு இருக்கும்.

நண்பர்களுக்கு யாராவது ஏதாவது சொன்னால் இவனிடமே வந்து முறையிடுவார்கள்.

இதை அவன் பெருமையாக எண்ணுவான். உடனே அவர்களோடு போய் சண்டை போடுவான். குமாரோடு அவர்களுக்கு எந்தப் பகையும் இருக்காது. தனது நண்பர்களுக்காக அவன் அடி தடிகளில் இறங்கினாலும், பிரச்சினை பெரிதான பிறகு அந்த நண்பர்கள் அவனைக் காப்பாற்ற வருவதுமில்லை. அடி வாங்கிய பிள்ளைகளது பெற்றோர் அதிபரிடம் முறையிடுவார்கள். குமார் நன்றாக அடிவாங்குவான். பாடசாலையில் எல்லோரும் அவனை வெறுத்து ஒதுக்கினார்கள். ஆனாலும் அவன் தனது நண்பர்களை பெரிதென எண்ணினான். பல தடவைகள் குமாரை பாடசாலையை விட்டும் ஒதுக்கி வைத்தார் அதிபர். அவனுடைய தாத்தாதான் அதிபரோடு நயமாகப் பேசி மீண்டும் பாடசாலையில் சேர்த்து விடுவார். குமாரிடம் அடிக்கடி பணம் கேட்டுப் பெற்றுக் கொள்வார்கள் அவனது நண்பர்கள்.

பாடசாலையில் எல்லோரும் அவனை வெறுப்பதனால் நண்பர்களும் வெறுத்துவிடக் கூடாது என எண்ணி அவர்கள் கேட்கும் பணத்தைக் கொடுத்து வந்தான் அவன்.

ஒருநாள் அவனுடைய தாத்தா திடீரென இறந்துவிட்டார். அவனுக்காக இருந்த ஒரேயொரு

ஜீவனும் போய் விட்டதை எண்ணி அழுதான் குமார். கடைசியாக தனது நண்பர்கள் தன்னைக் கைவிட மாட்டார்கள் என்று அவன் உள்ளத்தில் பெரிய நம்பிக்கை ஏற்பட்டது. ஆவலோடு அவர்களிடம் போனான். அவர்கள் யாரும் அவனை ஏறெடுத்தும் பார்க்கவில்லை, பேசவும் இல்லை. இனிமேல் அவனிடம் பணம் பறிக்க முடியாது என்பதால் அவனது நட்பைத் துண்டித்துக் கொண்டார்கள். இதை அவனால் தாங்க முடியவில்லை. கதறி அழுதான். அவன் அழுது கொண்டிருக்கும் போது அவனது முதுகை யாரோ இதமாக வருடுவதை உணர்ந்து திரும்பிப் பார்த்தான். அங்கே சதீஸ் நின்றிருந்தான். சதீஸ் மிகவும் ஏழை மாணவன். அவன் அன்னை அப்பம் சுட்டு அவனைப் படிக்க வைத்தாள். அவன் அதிகாலையிலே அம்மா சுட்டுத்தரும் அப்பங்களை கடைகளில் போட்டுவிட்டுத் தான் பாடசாலைக்கு வருவான். அதனால் அவனை எல்லோரும் “ஆப்பக்காரா... ஆப்பக்காரா...” என்று கேலி செய்வதுண்டு. குமாரும் பல தடவைகள் கேலி செய்து சதீஸை அழ வைத்திருக்கிறான். இன்று அவன் மட்டுமே குமாருடைய ஆதரவுக்காக வந்திருந்தான்.

“கவலைப்படாதே குமார். நீ எங்கள்

வீட்டுக்கு வா. எங்கள் அம்மா உன்னை எங்கள் வீட்டுக்கு கூட்டிக் கொண்டு வரச் சொன்னார்." என்று சொன்ன போது வியப்போடு நோக்கினான் குமார். "சதீஸ்... என்னிடம் நிறைய உதவிகள் வாங்கிக் கொண்ட எனது நண்பர்களே என்னைக் கைகழுவி, விட்டு விட்டார்கள். ஆனால் நீ எனது நண்பனும் இல்லை, நான் உனக்கு எந்த உதவியும் செய்ததுமில்லை. இருந்தாலும் நிறையவே உனக்கு நோவினை செய்திருக்கிறேன். அதையெல்லாம் பெரிது படுத்தாமல் நீ மட்டும் தான் என்னை வீட்டுக்குக் கூப்பிடுகிறாய்." என்றான் கவலையோடு.


"குமார் எங்களிடம் நிறைய பணம் இல்லை. ஆனால் பாசம் இருக்கிறது, நல்ல பண்பு இருக்கிறது. உனக்கும் உன் அம்மா இருந்திருந்தால் அதைக் கற்றுத் தந்திருப்பார். படிப்பு மட்டும் போதாது. அதனோடு நல்ல பண்புகளும் சேர்ந்து வளர வேண்டும் என்று எங்கள் அம்மா அடிக்கடி சொல்லித் தருவார். இனிமேல் நீயும் எங்களோடு இருந்துவிடு. என் அம்மாவை உன் அம்மாவாக நினைத்துக் கொள்." என்று கூறி தனது வீட்டுக்கு அழைத்துச் சென்றான்.

மனித நேயத்தில் தான் "உண்மை நட்பு" பிறக்கிறது என புரிந்து கொண்டான் குமார். சதீஸோடு அவனும் கடைகளுக்கு அப்பம் கொடுத்து விட்டு பாடசாலைக்குச் செல்லலானான். சதீஸின் அம்மா கூறிய நல்ல போதனைகளைக் கேட்டு விரைவிலேயே ஒரு நல்ல மாணவனாக மாறிவிட்டான் குமார். பாடசாலையில் அவனை வெறுத்து ஒதுக்கியவர்கள் யாவரும் அவனிடம் அதிக அன்பு பாராட்டினார்கள். அவன் ஒரு பணக்காரனாக இருந்த போது கிடைக்காத நல்ல மதிப்பும், நல்ல பெயரும் இப்போது கிடைக்கிறது. அவனது தீய நண்பர்களை அவன் திரும்பியும் பார்ப்பதில்லை. இப்போதெல்லாம் குமார் ஒரு நல்ல மாணவன் மாத்திரமல்ல, அதிக திறமை மிக்க மாணவனாகவும் திகழ்கிறான்.

01. தீய நட்புகள் வெறுப்பைப் பெற்றுத் தரும்.

02. நல்ல போதனைகள் நல்ல சந்ததியை, நல்ல நண்பர்களைப் பெற்றுத் தரும்.





## 2. அன்னையின் ஆசிர்வாதம்.

பஸரியாவும், இமாஸாவும் நல்ல நண்பிகள். இருவரும் ஒருவர் மீது ஒருவர் மிகவும் அன்போடு இருந்தனர். ஒரே பாடசாலையில் கல்வி கற்றனர். இருவருக்குமே பன்னிரண்டு வயது. அன்று ஒரு சனிக்கிழமை. இருவரும் டியூஷன் வகுப்புக்குப் போய்விட்டு வீட்டுக்கு வந்து கொண்டிருந்தனர். அப்போது பக்கத்து வீட்டுக்காரர் ஓடிவந்து,

“இமாஸா! உங்கள் தாயாருக்கு திடீரென்று நெஞ்சு வருத்தம் கூடிவிட்டது. அதனால் பஸரியாவின் தாயார் ஆட்டோ பிடித்து வைத்தியமனைக்கு அழைத்துச் சென்று விட்டார். இந்த வீட்டுத் திறப்புகளை உங்கள் இரண்டு பேரிடமும் தரச் சொல்லி விட்டுப் போனார்கள்.” என்று கூறி இருவரிடமும் வீட்டுத் திறப்புக்களைக் கொடுத்து விட்டு போய்விட்டார். அந்த வீட்டுத் திறப்புக்களை வாங்கிக் கொண்டு இருவரும் தத்தமது வீடுகளுக்குச் சென்று விட்டனர்.

அப்போது முற்பகல் பத்துமணி. பஸரியா

தனது வீட்டுக்குள் நுழைந்த போது கவனித்தாள். வீட்டு வேலைகள் யாவும் அப்படியே கிடந்தன. சமையல்கூட எதுவுமே செய்திருக்கவில்லை. அவள் முதலில் வீட்டை முழுமையாக சுத்தப்படுத்தினாள். அங்கொன்றும், இங்கொன்றுமாக தம்பிமார்களுடைய அழுக்குத் துணிகள் சிதறிக் கிடந்ததை எடுத்து சலவைத் தூளில் ஊறவைத்து விட்டு, அரிசியை கழுவி அடுப்பில் ஏற்றினாள். சமைப்பதற்கு வேறு எதுவும் இருக்கவில்லை. அவள் தாயார் அவசரத்தோடு போய்விட்டதால் சமையல் ஏற்பாடுகள் எதுவுமே கவனித்துச் செய்ய அவகாசம் கிடைக்கவில்லை. அதை உணர்ந்து கொண்ட பஸரியா பக்கத்துக் கடையான அப்புவின் கடைக்குச் சென்று தாய் வந்ததும் தருவதாகச் சொல்லி நெத்தோலியும், பருப்பும், அப்பளமும் வாங்கிக் கொண்டு வந்து அவைகளைச் சமைத்துத் தயார் படுத்தினாள். தம்பிமார்கள் இருவரும் இன்னும் விளையாடி விட்டு வரவில்லை. அதனால் சலவைத்தூளில் ஊறவைத்திருந்த துணிகளை கழுவி உலர்த்தி விட்டு பகல் (ளுஹர்) தொழுகையில் ஈடுபட்டாள். அவள் தொழுது முடியும் போது தம்பிமார்களும் பள்ளியில் தொழுது விட்டே வீட்டுக்கு வந்தார்கள். அவர்களுக்கு சாப்பாடு பரிமாறி விட்டு அவளும் அவர்களோடு சேர்ந்து சாப்பிட்டாள்.

மிகுதி உணவை நன்றாக மூடிவைத்து விட்டு, அவர்கள் சாப்பிட்ட எச்சில் தட்டுகளையும் கழுவி வைத்து விட்டு "கொஞ்சம் விளையாடலாம்" என எண்ணியபடி தம்பிமார்களை அழைத்துக் கொண்டு இமாஸாவின் வீட்டுக்குச் சென்றாள். அப்போது இமாஸாவும், அவளது தம்பியும் கடுமையான பசியின் காரணமாக மிகவும் சோர்ந்து போய் கட்டிலில் படுத்துக் கிடந்தனர். வீட்டு வேலைகள் யாவும் அப்படியே கிடந்தன. இமாஸாவை நினைக்கும் போது பஸரியாவுக்கு மிகவும் கவலை ஏற்பட்டது.

இமாஸாவையும், அவளது தம்பியையும் தம் வீட்டுக்கு அழைத்துச் சென்று சாப்பாடு கொடுத்தாள். பஸரியாவின் வேலைகளைக் கண்டு மிகவும் வியந்து போனாள் இமாஸா.

"பஸரியா! உனக்கும் எனக்கும் ஒரே வயது. நாம் ஒரே வகுப்பு. ஆனால் உன்னால் வீட்டு வேலைகள் எல்லாவற்றையும் செய்ய முடிகிறது. சமைக்கவும் தெரிகிறது. என்னால் எதுவும் முடியவில்லையே." என்றாள் வேதனையோடு.

"ஏன் முடியாது இமாஸா? எங்களிடம் இறைவன் நமக்களித்த அறிவு இருக்கிறது. அதைவிட ஆரோக்கியம் இருக்கிறது. அதைவிட

வேறு என்ன வேண்டும்?" என்றாள் பஸரியா.

"உனக்கு உன் தாயார் கற்றுத் தந்தது போன்று எனக்கு என் தாயார் கற்றுத் தரவில்லையே" என கவலையுடன் கூறினாள் இமாஸா.

"இதற்கெல்லாம் வேறாக வகுப்பு நடத்த வேண்டியதில்லை இமாஸா. கண் பார்த்ததை கை செய்ய வேண்டும். படைப்புகளின் மீது அன்பு காட்டினால் இறைவன் எங்கள் மீது இரக்கம் காட்டுவான். என்று எங்கள் ஆசிரியர் ஒரு நாள் சொல்லித் தந்தாரே. அது உனக்கு ஞாபகம் இருக்கிறதா?" என வினவினாள் பஸரியா.

"ஆமாம்" என்றாள் இமாஸா.

"நீ அதை எந்த அளவில் செயற் படுத்துகிறாய்?" என்று வினவிய போது, எதுவும் பேசாமல் மௌனமாக இருந்தாள் இமாஸா. "மாதா, பிதா, குரு, தெய்வம்" என்று பெரியோர்கள் சொல்வதுண்டு. அது உண்மை தான்! அவர்கள் தான் நமக்கு நல்ல விடயங்களைச் சொல்லித் தருகிறார்கள். அவர்கள் சொல்லும் எந்தப் போதனைகளையும் நாம் அலட்சியப் படுத்தக் கூடாது. நானும் அலட்சியப்படுத்துவதில்லை.

எதையும் ஆராய்ந்து பார்ப்பேன். நன்றாகச் சிந்தித்துப் பார்ப்பேன்.

“நான் எல்லோரிடத்திலும் மனப் பூர்வமாக அன்பு காட்டுகிறேன். அதனால் எல்லோரும் என்னோடு மிகவும் அன்பாக இருக்கிறார்கள். என் தாயிடத்தில் அதிகமாக அன்பு காட்டுகிறேன். அதனால் தான் அவர்களுடைய கஷ்டங்களை என்னால் உணர முடிகிறது. பாவம் என் அன்னை. வீட்டில் எல்லா வேலைகளையும் தனியாகவே செய்கிறார்கள் என்பதால் முடிந்தவரை அவர்களுக்கு உதவியாக இருக்கிறேன்.” என்றாள். இதைக் கேட்டுக் கவலைப்பட்டாள் இமாஸா.

“என் தாயும் வீட்டு வேலைகளை எல்லாம் தனியாகத் தான் செய்வார். அதனாலோ என்னவோ அவருக்கு அடிக்கடி சுகமில்லாமல் போகிறது. ஆனால் நான் ஒரு நாளும் இவை பற்றி சிந்தித்துப் பார்த்ததும் இல்லை பஸரியா.”

“சிந்தித்துப் பார்க்க வேண்டும் இமாஸா. சிந்திக்காமல் இருப்பது தவறு. நாம் படிக்கின்ற பிள்ளைகள். படிக்க வேண்டிய விடயங்கள் பாடசாலையில் மட்டுமல்ல, நம் வீடுகளிலும், சூழல்களிலும் நிறைய உள்ளன. ஒரு தாயின் கஷ்டத்தை உணர முடியாத நாம் உலகில் வேறு

எதை உணரப் போகிறோம்? வீட்டு வேலைகளைக் கூட செய்யத் தெரியாத நிலையில் வேறு எதை சாதிக்கப் போகிறோம்? நான் காலையிலேயே தொழுது விட்டு முடிந்தவரை வீட்டு வேலைகளை செய்து கொடுத்து விட்டுத் தான் பாடசாலைக்கு ஆயத்தமாவேன். என் தாய் எனக்காக நிறைய பிரார்த்தனை செய்கிறார். ஒவ்வொரு தினமும் என்னை கட்டியணைத்து முத்தமிடுகிறார். இதே உற்சாகத்துடன் பாடசாலை செல்வதால் என்னால் நன்றாகப் படிக்க முடிகிறது. சந்தோஷமாக எதிலும் ஈடுபட முடிகிறது." இப்படி சந்தோஷமாகக் கூறினாள் பஸரியா.

இப்போது இமாஸாவுக்கும் உற்சாகம் பிறந்தது. பஸரியா எல்லோரிடமும் நல்ல பெயர் பெற்றிருப்பதற்கும், திறமையோடு படித்து முன்னேறுவதற்கும் அன்னையின் ஆசிர்வாதமும் ஒரு காரணமென உணர்ந்தாள். இனிமேல் தானும் இது போன்றே வாழ வேண்டும் என உறுதி பூண்டவளாக மிகவும் உற்சாகமாக வீட்டுக்குச் சென்றாள் தன் தம்பியோடு.

**குறிப்பு :**

இமாஸா மட்டுமல்ல! இளைய சந்ததிகள் இது போன்ற நல்ல விடயங்கள் பற்றி சிந்தித்து, செயற்பட்டு, சிறந்த சமுதாயத்தை உருவாக்க வேண்டும்.





3.

## அப்பா கஞ்சத்தனம் வேண்டாம்...!

அன்று காலை சுரேஷ் ஆபிஸ் போவதற்காக ஆயத்தமாகிக் கொண்டிருந்தான். அப்போது தேநீரோடு வந்த அவன் மனைவி தேநீரை அவனிடம் கொடுத்து விட்டு,

“எனக்கு சுகமில்லை. மருந்து எடுக்க வேண்டும். பணம் வேண்டும்” என்றாள். அவன் முன்னூறு ரூபாய் கொடுத்து விட்டுப் போனான். ஆனால் அவள் மருந்துக்குப் போகவில்லை. பக்கத்து வீட்டுப் பார்வதியின் மகனுக்கு அன்று பிறந்த நாள். இவர்களையும் அழைத்திருந்தனர். அந்தப் பணத்தில் ஒரு பரிசை (பாடசாலை பேக்) வாங்கிக் கொண்டு போய் கொடுத்து விட்டு வந்தாள் மலர். இதை கவனித்துக் கொண்டிருந்த அவர்களுடைய மகன் நவீன் இதுபற்றி வினவினான்.

“அம்மா! பொய் சொல்வது பாவம். எல்லாப் பாவங்களுக்கும் பிரதானமாக அமைவது பொய்தான். அதனால் பொய் சொல்லக் கூடாது, என்று பாடசாலையில் கற்றுத் தந்தார்கள். ஆனால் நீங்கள் அப்பாவிடம் பொய் சொல்லி எதற்காக

பணம் வாங்கினீர்கள்? இது பெரிய பாவம் இல்லையா?” என்றான். நவீனை அருகில் அழைத்து மடியில் அமர்த்திக் கொண்ட அவனது அன்னயான மலர்,

“பொய் சொல்வது பாவம் தான். ஆனால் உண்மையைச் சொல்லி இருந்தால் உன் அப்பா பணம் தந்திருக்க மாட்டார். ‘பரிசு கொடுக்கவும் வேண்டாம். பிறந்தநாள் வீட்டுக்கு போகவும் வேண்டாம்.’ என்று சொல்லிவிடுவார். அக்கம் பக்கத்தவரோடு இணக்கமாக வாழ வேண்டுமானால் இப்படி கஞ்சத்தனம் காட்டக் கூடாது. அதனால் தான் பொய் சொல்ல வேண்டியதாகி விட்டது.” என்றாள். இன்னும் ஒரு நாள்,

“நவீனுக்கு சுகமில்லை. மருந்துக்குப் போக வேண்டும்” என்று கூறி சுரேஷிடம் பணம் வாங்குவதைக் கண்டான் நவீன். ஆனால் அவனுக்கு எந்தவித சுகக் குறைவும் ஏற்பட்டிருக்கவில்லை. தனது அன்னை இந்தப் பணத்தை என்ன செய்யப் போகிறாள் என்பதை மிக ஆர்வத்தோடு கவனித்துக் கொண்டிருந்தான் நவீன்.

எதிர்வீட்டு கார்த்திக்குக்கு பாடசாலைக்குப் போக ஒழுங்காக ஒரு பேக் இருக்கவில்லை.

பிய்ந்து கந்தலாகிப்போன ஒரு பழைய பேக்தான் இருந்தது. அவனுக்கும் ஒரு புதிய பேக் வாங்கிக் கொடுப்பதைக் கண்டான். இப்படி அடிக்கடி அவனிடம் பொய் சொல்லி பணம் பெற்று அக்கம் பக்கத்தவர்களுக்கு உதவி செய்து வந்தாள் மலர். ஒரு நாள் பத்திரிகை படித்துக் கொண்டிருந்த சுரேஷிடம் வந்தான் நவீன்.

“அப்பா! அக்கம் பக்கத்தவர்களுக்கு உதவி செய்து வாழ்வது நல்ல காரியமா? கெட்ட காரியமா?” என வினவினான். “நல்ல காரியம் தான்” என்று பதில் சொன்னான் சுரேஷ். “அப்படியானால் அதை மறைவாக செய்ய வேண்டுமா? வெளிப்படையாக செய்ய வேண்டுமா?” என மீண்டும் வினவினான். “எப்படியும் செய்யலாம், உதவுவதுதான் எங்கள் நோக்கமாக இருக்க வேண்டும்.” என்றான்.

“உதவிகள் செய்தால் எங்களுக்கு தீமைகள் ஏற்படுமா?” என்று திரும்பவும் கேட்டான் நவீன். “இல்லையே! யார் சொன்னது?” என்று மகனைப் பார்த்தான் சுரேஷ். “அப்படியானால் உதவிகள் செய்து வாழ்வதில் எங்களுக்கு என்ன நன்மைகள் கிடைக்கப் போகிறது???” என அழுத்துக் கொண்டான் நவீன். “என்ன! அப்படி சாதாரணமாக சொல்லி விட்டாய் ராஜா. அதனால் இறைவனுடைய அன்பு கிடைக்கிறது. அந்த அன்பு

கிடைக்குமானால் எங்களுக்கு எல்லாவிதமான நன்மைகளும் கிடைத்துக் கொண்டே இருக்கும்" என்று விபரமாக சொன்னான் சுரேஷ்.

"அப்படியானால் உங்களுக்கு ஏன் அந்த ஆசை இல்லை?" இப்படி நவீன் கேட்ட போது திகைத்து விட்டான் சுரேஷ். "அப்பா அம்மாவுக்கு உதவி செய்து வாழ ஆசை. நீங்கள் கஞ்சத்தனம் காட்டுவதால் உங்களிடம் அம்மா அடிக்கடி பொய் சொல்கிறார். இப்படி பொய் சொல்வது பாவம் இல்லையா?"

தனது மகனை வாரியணைத்து முத்தமிட்டான் சுரேஷ். அன்றிலிருந்து சுரேஷும் உதவி புரியும் மனப்பான்மையோடு வாழத் தொடங்கினான்.

**குறிப்பு:**

பிள்ளைகளே..... இதுபோன்று நீங்களும் பெற்றோருடைய சின்னச்சின்னக் குறைகளை சுட்டிக்காட்டி நல்லவர்களாக வாழப் பழகலாமே....

## 4. சிறைப்பறவை

பாலா ஒரு பெரிய பணக்காரனுடைய மகன். மிகவும் திறமையான மாணவன். ஒன்பதாம் தரத்தில் கல்வி பயின்று கொண்டிருந்தான். அவனுக்கு ஒரு சில நண்பர்கள் மாத்திரமே இருந்தார்கள். இது அவனுக்கு ஒரு குறையாக தோன்றியது. இன்னும் நிறைய நண்பர்கள் இருந்தால் சந்தோஷமாக இருக்கலாம் என்று எண்ணினான்.

புதிதாக சில நண்பர்களுடைய நட்பை ஏற்படுத்திக் கொண்டான். அவர்கள் தீயவர்கள் என்று அவனுக்குத் தெரியாது. அவர்களோடு அதிகமாக ஊர் சுற்றினான். அதுவே அவனுக்கு சுதந்திரம் என நினைத்து அவர்கள் அழைக்கும் இடங்களுக்கெல்லாம் செல்லத் துவங்கி விட்டான்.

ஒரு நாள் அவனது புதிய நண்பன்

ஒருவன் “பாலா இது ஃபாரின் சாக்லேட், வாயில் போட்டுப்பார். இன்பமாக இருக்கும்” என்று கூறிக் கொடுத்தான். அது ஒரு வித்தியாசமான சுவை. அத்தோடு சின்னதாய் ஒரு மயக்கம் ஏற்பட்டது. ஏதோ இன்ப உலகில் சஞ்சரிப்பதைப் போன்று உணர்வு ஏற்பட்டது. அப்படியே வீட்டில் போய் படுத்துவிட்டான்.

மறுதினம் அந்த சாக்லேட்டைச் சுவைக்க வேண்டும்போல் ஆவல் ஏற்படவே அந்த நண்பனை தேடி வந்தான். “இந்த சாக்லேட் சாதாரண சாக்லேட் அல்ல. மிகவும் விலை கூடியது. இன்று மட்டும் சும்மா தருவேன். நாளையும் வேண்டும் என்றால் பணம் கொண்டுவா. எனக் கூறி கொடுத்தனுப்பினான். அன்றும் இதே இன்பத்தை உணர்ந்தான். அதில் போதை கலக்கப்பட்டிருப்பதை அவன் அறியவில்லை.

தனது நண்பர்களின் திட்டத்தையும் புரிந்து கொள்ளவில்லை. வீட்டில் படிப்புக்காக என்று பல பொய்களைச் சொல்லி தினம் பணம் வாங்கி இந்த போதை சாக்லேட்டை சுவைக்கத் தொடங்கிவிட்டான்.

தினமும் இப்படியே நடந்தது. பாலா தினமும் பகுதிநேர வகுப்புக்குச் செல்வதாக பொய் சொல்லி பெற்றோர்களை ஏமாற்றி வந்தான். அவனது பழைய நண்பர்கள் அவனுக்க புத்திமதி சொல்வதால் அவர்களை விட்டு விலகிக் கொண்டான். இந்த சாக்லேட்டை பாலாவிடம் அதிகக் கூடிய விலைக்கு விற்று பணம் ஈட்டத் துவங்கினர் அந்த தீய நண்பர்கள். அவன் போதைக்கு அடிமையாகி விட்டதால் "எவ்வளவு பணம் போனாலும் பரவாயில்லை. தனக்கு சாக்லேட் கிடைத்தால் போதும்" என்ற நிலைக்கு வந்து விட்டான் பாலா. வீட்டில் தனது தந்தையிடம் அடிக்கடி பணம் திருடினான். வீட்டில் ஒவ்வொரு பொருளாக திருடி நண்பர்களிடம் கொடுத்து போதையைப் பெற்றான். அந்த நண்பர்களே அவனது உலகம் என எண்ணியதால் அவர்கள் எதைச் சொன்னாலும் செய்வான்.

வீட்டில் இருக்கும் நகைகளையும் திருடி அவர்களிடம் கொடுத்தான். திடீரென வீட்டில் ஒவ்வொன்றாக காணாமல் போவதால் அவனது பெற்றோர் காவல் நிலையத்தில் புகார்

கொடுத்தனர். திடீரென ஒருநாள் பாலா கையும் களவுமாக பொலிஸாரிடம் அகப்பட்டு கூண்டில் அடைக்கப்பட்டான். இதை ஒரு துளியும் எதிர்பார்க்காத அவனுடைய பெற்றோர் அதிர்ச்சி அடைந்தனர். உடனே மாரடைப்பு ஏற்பட்டு அவனது தந்தை வைத்தியமனை அவசர சிகிச்சைப் பிரிவில் சேர்க்கப்பட்டார்.

பாலா செய்த தவறினால் இன்னும் அவனுடைய அன்னை ஆஸ்பத்திரியும் வீடுமாக அலைந்து கொண்டு இருக்கிறார்.

நன்றாக படித்து நம்மை காப்பாற்றுவான் என முழுமையாக நம்பிக்கையும் பாசமும் வைத்து வளர்த்த அந்த அன்பு மகன் படிப்பையும், மதிப்பையும் தீய நண்பர்களுடைய சகவாசத்தினால் இழந்துவிட்டு சிறைக்கூண்டில் கம்பி எண்ணிக்கொண்டிருக்கிறான்.

**குறிப்பு:**

தீய சகவாசம், சிறந்த எதிர்காலத்தை நாசப்படுத்தும்.



## 5. தண்டனை!

பாஸ்கருடைய பாட்டி கடுமையாக நோய்வாய் பட்டிருந்தாள். அவளுக்கு நீண்ட நாட்களாகவே சுகமில்லை.

பாட்டியை ஒழுங்கான முறையில் பார்த்துக் கவனிக்க யாருமில்லை. அவனது அம்மா வீட்டு வேலைகள் முடிந்தால் தூங்குவாள். அல்லது தொலைக்காட்சியில் லயித்து விடுவாள். இல்லையேல் அக்கம் பக்கத்து பெண்களோடு அரட்டையில் இறங்கிவிடுவாள்.

பாஸ்கர் மீது பாட்டிக்கு அன்பு அதிகம். அவள்தான் அவனுக்கு குட்டிக்கதைகள் சொல்வாள். அவன் கதை கேட்டபடி பாட்டியோடு தான் தூங்குவான். ஆனால் பாட்டிக்கு சுகமில்லாமல் போனதோடு அவனுக்கு கதை சொல்ல யாருமில்லை. அம்மாவும் அப்பாவும் கதை சொல்ல மாட்டார்கள்.

இப்போதெல்லாம் அவன் அம்மா

பாட்டியோடு படுக்க அனுமதிப்பதில்லை. அவன் அடம் பிடித்தாலும் கூட விட மாட்டாள். பாட்டி பல காலமாக படுக்கையோடு கிடப்பதினால் "நோய்க் கிருமிகள் தொற்றிக் கொள்ளும்" என்றும் பயமுறுத்துவாள்.

டாக்டர் வாரம் ஒரு முறை வந்து பாட்டியை பரிசோதித்துவிட்டுப் போவார். அது தவிர அம்மா அவள் பக்கம் வரவே மாட்டாள். அப்பாவும் எப்போதாவது ஒருமுறை பாட்டியின் அறையை தூரத்தில் இருந்து எட்டிப் பார்த்து விட்டு போய் விடுவார். பாட்டிக்கு தனது மகனோடு அருகில் இருந்து நிறைய பேச வேண்டும் என்ற ஆசை. ஆனால் எழுந்து நடமாட முடியாது. அதனால் பேரனாகிய பாஸ்கரிடம் தூது அனுப்புவாள். ஆனால் அதை அப்பாவிடம் சொன்னாலே அம்மாவிடம் இருந்து திட்டுதல் தான் கிடைக்கும்.

"பாட்டியின் பக்கத்தில் போனால் அவள் நோய் உன்னை தொற்றிக் கொள்ளும். இனிமேல் காலை உடைப்பேன்" என கூச்சலிடுவாள். அவனுக்கு அம்மா என்றாலே பயம்தான். தெரியாமல் பாட்டியிடம் போவான். ஏசியும் பேசியும் வேலைக்காரி மட்டும்தான் அவளிடம் போய் சாப்பாடு கொடுப்பாள். ஒரு நாள், பாட்டியை

அவசரமாக பரிசோதனைக்கு உட்படுத்த வேண்டும் என வைத்தியமனைக்கு கொண்டுவரச் சொன்னார் டாக்டர். "போகப்போகும் உயிரை நிறுத்தவா முடியும்? பணத்தை எதற்காக வீண் விரயம் செய்ய வேண்டும்??" என்று அம்மா சொன்னதோடு அப்பாவும் சும்மா இருந்து விட்டார்.

உயிரோடு போராடிக் கொண்டிருந்த பாட்டியை யாரும் போய் பார்க்கவில்லை. அன்று இரவு எல்லோரும் திரைப்படம் பார்த்து விட்டுத் தூங்கியதாலும், மறுதினம் விடுமுறை என்பதாலும் விடிந்து நேரமாகிய பிறகு தான் எல்லோரும் ஒவ்வொருவராக எழுந்தார்கள். பாட்டியை யாருக்கும் நினைவு வரவில்லை. பகலாகி அவள் அறையை எட்டிப் பார்த்த வேலைக்காரி கூச்சலிட்டாள். எல்லோரும் ஓடிப்போய் பார்த்தார்கள். சின்ன ஈக்களும், எறும்புகளும் மொய்த்திருக்க கண்களும், வாயும் திறந்த படியே இறந்து, விறைத்துப் போய் இருந்தாள் பாட்டி. முதல் நாள் மாலையே அவள் உயிர் பிரிந்து விட்டது என்பதை அவர்கள் அறிந்திருக்கவில்லை. அவள் இறந்து போனதை நிம்மதியாக எண்ணினார்கள்.

இன்று பாஸ்கர் வளர்ந்து பெரியவனாகி பன்னிரண்டு வயதில் ஒரு மகன் இருக்கின்றான்.

அன்று பாட்டி இருந்த அறையில் அதே நிலைமையில் அவனது அம்மா இருக்கிறாள். அன்று பாட்டியை அம்மா கவனித்ததைப் போன்று அவன் நடத்தவில்லை. வேலைக்காரி வைக்கவில்லை. அவனும், அவனுடைய மனைவியும், அவனது மகனும் மாறி மாறி கவனித்துக் கொள்கிறார்கள். இடைக்கிடை வெந்நீர் வைத்து குளிப்பாட்டி, அவள் கட்டிலை சுத்தப்படுத்தி எல்லோரோடும் சரி சமமாக புளங்கும்படியாக அவளை வைத்துக் கொண்டனர்.

“அம்மா இதே போன்று என் பாட்டியையும் சுத்தமாகவும், சந்தோசமாகவும் வைத்திருந்தால் அவளுடைய கடைசிக் காலத்தை திருப்தியாக கழித்திருப்பார். பாவம் அம்மா பாட்டி. ஒரு மிருகத்தை விட மோசமாக நடத்தி விட்டீர்கள். பாட்டி உள்ளத்தால் எப்படியெல்லாமோ அழுதிருப்பார், பாடுபட்டிருப்பார். ஒருவர் நோயாளியாக இருக்கும் போது தான் அவருக்கு அன்பும், ஆதரவும் அதிகமாக தேவைப்படுகிறது. இது அன்று எனக்கு புரியவில்லையே அம்மா. இன்று தான் என் மனைவி புரிய வைத்திருக்கிறாள்.

இதைக் கேட்டு கண்ணீர் வடித்தாள் அவன் அன்னை.

"இன்று உனக்கு நல்ல மனைவி கிடைத்திருக்கிறாள். அதனால் என்னை நல்ல முறையில் கவனித்துக் கொள்கிறாய். இதே போன்று உன் அப்பாவுக்கு நானும் நல்ல மனைவியாக வாழ்ந்திருந்தால் எனக்கு இப்படியொரு தண்டனை கிடைத்திருக்காது. எனக்கு வந்ததால் தான் இந்த காஸ நோயின் வேதனை எனக்கும் புரிகிறது. தேக ஆரோக்கியத்தோடும், வசதியோடும் வாழும் காலத்தில் நம்மால் முடிந்த அளவில் நன்மை செய்து, உதவிகள் புரிந்து வாழ வேண்டும். மகனே பாஸ்கர் நீ என்னைப் போன்று துர்க்குணம் கொண்டவனாக வாழ்ந்து விடாதே. என்னைப் பார்த்து படிப்பினை பெற்றுக்கொள்" எனக் கூறி கண்ணீர் விட்டு அழுதாள் அந்த அன்னை. நிச்சயமாக இந்த படிப்பினை பாஸ்கருக்கு மட்டுமல்ல. எல்லோருக்கும்தான்!

# 6. கல்விக்கு காதல் தடை வேண்டாமே!

கதீரா நல்ல அழகி. இவ்வருடம் சா.தர பரீட்சைக்காக படித்துக் கொண்டிருப்பவள். அவளிடம் நல்ல திறமை இருந்தது. அவள் பரீட்சையில் சித்தியடைவாள் என ஆசிரியர்களும், பெற்றோர்களும் நம்பிக்கை வைத்திருந்தனர்.

ஆனால் சில காலமாகவே அவளால் நிம்மதியாக படிக்க முடியாமல் இருந்தது. அதற்கு காரணம் நாதிர்தான். அவளை விரும்புவதாக சொல்லி அவளை சுற்றி சுற்றி வந்தான். இது வீட்டார்களுக்கு தெரிந்தால் அவளை பாடசாலைக்கு அனுப்பமாட்டார்கள். அதனால் அவளுடைய படிப்பும், எதிர் காலமும் பாதிப்படையும்.

இதையெல்லாம் எடுத்துச் சொன்னாலும் அவன் எதையும் கேட்கக்கூடியவனாகவும் இல்லை. திரும்பத் திரும்ப அவளையே சுற்றி சுற்றி வந்தான். அவளுக்கு இது பெரிய





தொல்லையாக இருந்தது. அதைவிட அவமானமாக இருந்தது. இரவு பகலாக இதை எண்ணி எண்ணி உருகினாள். வீட்டில் சொன்னால் பிரச்சினையாகி விடும். என்ன செய்வது என புரியாமல் குழம்பினாள்.

கடைசியாக அவளது தோழி லதீபாவிடம் மிகவும் ரகசியமாக சொன்னாள்.

"அவ்வளவு தானே கவலையை விடு நான் பார்த்துக் கொள்கிறேன். நீ நிம்மதியாக படி" என்று ஆறுதல் படுத்தினாள். நாதிருடைய தங்கையும் அதே பாடசாலையில், அதே வகுப்பில் படித்துக் கொண்டிருந்தாள். திடீரென லதீபாவின் அண்ணன் அவளிடம் வந்து தான் அவளை விரும்புவதாக சொன்னான். இதைக் கேட்டு பயந்து போன அவன் தங்கை நாதிரிடம் முறையிட்டாள்.

உடனே நாதிருக்கு கோபம் வந்து விட்டது. தனது தங்கையையும் ஒருவன் தொல்லை படுத்துவதாகச் சொல்லி அவனுடைய நண்பர்களை திரட்டிக் கொண்டு தாக்குவதற்காக வழியில் காத்து நின்றான்.

அப்போது கதீராவும், லதீபாவும், அவளது சகோதரனும் பாடசாலையிலிருந்து வந்து

கொண்டிருந்தனர். அப்போது லதீபாவின் சகோதரனான சுஹைலை தாக்குவதற்கு நாதிரும், அவனுடைய நண்பர்களும் சுற்றிவளைத்துக் கொண்டனர்.

"உங்களுக்கெல்லாம் என்ன பிரச்சினை?" என தயங்காமல் கேட்டான் சுஹைல்.

"நீ இவன் தங்கையை காதலிக்கிறாயா?" என ஒரு நண்பன் கேட்டபோது "இல்லையே.... யார் சொன்னது?" என பதில் அளித்தான் சுஹைல்.

"இவன் பயத்தில் பொய் சொல்கிறான். என் தங்கையிடம் விரும்புவதாக சொல்லியிருக்கிறான்." என கோபத்தில் கூச்சலிட்டான் நாதிர். நான் யாருக்கும் பயப்பட வேண்டிய அவசியம் இல்லை. அதே போன்று இவன் தங்கையை காதலிக்க வேண்டிய தேவையும் எனக்கு இல்லை" என நிதானமாக கூறினான் சுஹைல். "அப்படியானால் எதற்காக அவளை விரும்புவதாக சொன்னாய்?" என நாதிர் கேட்ட போது.

"ஒரு தங்கையை ஒரு அண்ணன் விரும்புவது ஒரு குற்றமான செயல் இல்லை. என் தங்கையோடு படிக்கின்ற எல்லா மாணவிகளையும்

என் தங்கையாக மதிப்பவன் நான். இதே போன்று ஏன் உங்களால் நினைக்க முடியவில்லை.?

உங்கள் தங்கைக்கு யாராவது இடைஞ்சல் படுத்தினால் ஆத்திரம் பொங்கி, வன்முறை வரைக்கும் போய்விடுகிறீர்கள். அதே போன்று மற்றவனுடைய தங்கைக்கு "லவ்" என்ற பேரில் இடைஞ்சல் ஏற்படுத்துவது பற்றி கவலைப்படுவதில்லை. அதனால் அவள் அவமானம் அடைவது பற்றியும், படிப்பு பாதிப்படைவது பற்றியும் சிந்தித்துப் பார்ப்பதும் இல்லை. உங்களுக்கு ஒரு நியாயம், மற்றவர்களுக்கு ஒரு நியாயமா? இப்படி கூறினான் சுஹைல். அவனை தாக்குவதற்காக வந்த நண்பர்களுக்கு உண்மை புரியவே விலகிக் கொண்டனர்.

"உங்களுக்கு உண்மையை உணர்த்தவே உங்கள் தங்கையிடம் அப்படி கூறினேன். நாங்கள் அனைவரும் கல்வி கற்கின்ற மாணவர்கள். நாம் ஒவ்வொருவரும் ஒன்று கூடி இங்கு படிக்கின்ற எல்லா மாணவிகளையும் நமது சொந்த சகோதரிகளாக மதித்து மற்றவர்களிடம் இருந்து பாதுகாப்பு கொடுத்து வந்தால் அவர்களுடைய கல்விக்கும் சரி, எதிர்காலத்துக்கும் சரி எந்த

பாதிப்புகளும் ஏற்படாமல் சமூகத்தின் கல்வி வளர்ச்சியை மேம்படுத்த முடியும்." என்றான் சுஹைல். உடனே கதீராவிடம் வந்து மன்னிப்புக் கேட்டான் நாதிர். அதன் பின் அவளை எந்த விதத்திலும் தொல்லை படுத்த அவன் வரவில்லை. இப்போதுதான் அவளுக்கு மிகவும் நிம்மதியாக இருந்தது. லதீபாவுக்கும், சுஹைலுக்கும் நன்றி கூறினாள் கதீரா. இப்போது அவள் மிகுந்த நம்பிக்கையோடு படித்துக் கொண்டிருக்கிறாள்.

**குறிப்பு:**

நமது மாணவ மாணவிகள் இது போன்று அறிவுடன் நடக்க வேண்டும்.





# 7. உறுதி வேண்டும்!

தினேஷ் ஒரு திறமை மிக்க மாணவன். மிகவும் ஏழை அவன் தந்தை ஒரு அன்றாட தொழிலாளி. ஒரு நாள் வேலைக்கு போகாவிட்டால் அவர்கள் வீட்டு அடுப்பு எறியாது. அவனுக்கு இரண்டு தங்கைகள். ஒருவர் ஐந்தாம் ஆண்டிலும், மற்றவர் இரண்டாம் ஆண்டிலும் கல்வி பயின்று கொண்டிருந்தனர், அவன் தந்தையின் உழைப்பு அன்றாட வாழ்வுத் தேவைகளுக்கு போதாது என்பதால் அவனது தாயார் வீட்டு வேலைக்கு அழைத்தால் போய் வேலை செய்து கொடுத்துவிட்டு கிடைக்கும் ஊதியத்தை கொண்டு வந்து படிப்புத் தேவைகளை சமாளித்து கொள்வான்.

இப்படித்தான் வாழ்வுச் சுமைகளை ஈடுசெய்து வாழ்ந்து வந்தார்கள். அவர்களுக்கு இருந்த ஒரே ஆசை, கனவு, இலட்சியம் எல்லாமே தினேஷ்தான். என்ன பாடுபட்டாவது அவனை நன்றாக படிக்க வைத்து ஒரு டாக்டராக உருவாக்க வேண்டும் என்று கனவு கண்டனர்.

அதை உணர்ந்தவனாக மிகவும் கவனமெடுத்து படித்துக் கொண்டிருந்த தினேஷுக்கு இப்போதெல்லாம் நிம்மதியாக படிக்க முடியாமல் இருந்தது. படிப்பு என்றாலே கோபம் வருகிறது. புத்தகத்தை எடுத்தாலே வெறுப்பு ஏற்படுகிறது. மிகவும் குழம்பிப் போயிருந்தான். அதற்கு காரணம் ஷாலினிதான். அவள் மீது ஓர் இனம் புரியாத ஈடுபாட்டை உணர்ந்தான். ஆம் அவளை அவன் காதலிப்பதாக தோன்றுகிறது. இதை அவளிடம் சொல்வதற்காக சுற்றிச் சுற்றி வருகிறான். ஆனால் சொல்ல முடியவில்லை. மனம் தவிர்க்கிறது. அங்கலாய்கிறது. ஒரு பைத்தியக் காரனைப் போன்று துடித்துக் கொண்டிருக்கிறான்.

கடைசியாக ஒரு முடிவுக்கு வந்தவனாக துணிவை வரவழைத்துக் கொண்டு அவளிடம் சென்று தனது உள்ளத்தை முழுமையாக வெளிப்படுத்துகிறான். இப்போதுதான் அவன் மனதில் இருந்த பாரம் குறைந்தது. நிம்மதி பிறந்தது.

இதைக் கேட்டு அவள் கோபப்படவில்லை. ஆத்திரப்படவில்லை. அழுது ஆர்ப்பாட்டம். செய்யவில்லை. ஆனால் அவன் கோரிக்கையை ஏற்றுக் கொள்ளவும் இல்லை. இதுதான் காதல் என்று நினைக்கிறாயா தினேஷ்"? அவள் மிகவும்

நிதானமாக கேட்டாள். “ஆமாம் ஷாலினி உன்னை காதலிக்கிறேன். உயிருக்குயிராக காதலிக்கிறேன். நீ இல்லாவிட்டால் என்னால் வாழ முடியாதென்று தோற்றுகிறது.” இப்படி அவன் கூறியதும் இதமாக ஓர் புன்னகை புரிந்தாள் ஷாலினி.

“நீ மிகவும் குழம்பிப் போய் இருக்கிறாய் தினேஷ். இதுக்கெல்லாம் பெயர் காதல் கிடையாது. பருவக்கோளாறு. இனக்கவர்ச்சி, ஹோர்மோன் மாறுதல்களால் ஏற்படுகின்ற தடுமாற்றம். இதெல்லாம் இந்த வயசுல ஏற்படுகின்ற சாதாரண விஷயங்கள்.

அவன் எதுவும் புரியாமல் அவளை பார்த்தான். “தினேஷ் இதெல்லாம் காதல் என்று மனதை குழப்பிக் கொள்ளாதே. படிக்கும் பிள்ளைகளுக்கு காதல் வர வேண்டாமே.” “அப்படியானால் கம்பு ஊன்றும் கிழவர்களுக்குத்தான் காதல் வர வேண்டுமா? அவன் கேலியாக வினவினான்.

“வரலாமே. பேரப்பிள்ளைகளிடம் கூட வரலாம். ஆனால் அந்த வயதில் படிக்க முடியாது தினேஷ். இந்த வயதில் மட்டும்தான் பாடசாலைகளில் எங்களால் படிக்க முடியும். எங்கள் மனதுக்கும் ஆசைகளுக்கும் நாம் அடிமையாகி வாழ்ந்தால் எங்களால் ஜெயிக்க

முடியாது. எதிர்காலத்தில் கைசேதப்பட வேண்டி ஏற்படும். அவைகளை எங்களுக்கு அடிமையாக்கி வாழ பழக வேண்டும். அப்போதுதான் ஜெயிக்க முடியும். எங்கள் இலட்சியத்தை அடைய முடியும்.

தினேஷுக்கு என்ன பேசுவது என்று புரியவில்லை "தினேஷ் உன் பெற்றோரை நினைத்துப் பார். உன் மேல் உயிரையே வைத்திருக்கிறார்கள். அவர்கள் வாழ்வை பிள்ளைகளுக்காக அர்ப்பணித்துக் கொண்டு பெரிய கனவுகளோடும், எதிர்பார்ப்புக்ளோடும் வாழ்ந்து கொண்டிருக்கிறார்கள். பிள்ளைகளின் நல்ல எதிர்காலத்தை விட சந்தோஷம் அவர்களுக்கு வேறு எதுவுமே இல்லை. அவர்கள் மனம் நோகும் படி எப்போதுமே நடந்து கொள்ளாதே தினேஷ்.

"உனது இந்த அறிவும் பண்பும் எனக்கு மிகவும் பிடித்திருக்கிறது ஷாலினி. இப்படியான ஒருத்தி என் வாழ்க்கை துணைவியாக வந்தால் மிகவும் சந்தோஷப்படுவேன்." க ா ல ம எல்லாத்தையும் மாற்றக்கூடியது. உன்னை, என்னை, நம் உள்ளத்தை, நம் எண்ணத்தை, இப்படி எல்லாத்தையும் தான். உனக்கு எதிர்காலத்தில் என்னை விட சிறந்த துணை கிடைக்கலாம். அல்லது நானே தான் அது என்று விதியில் இருந்தால் அதுவும் நடக்கலாம். நம்

விதியை இறைவன் கையில் ஒப்படைப்போம். எதுக்கும் அவசரம் வேண்டாம். எங்கள் எண்ணங்கள் தூய்மையாக இருந்தால் எதிர்காலமும் சுபிட்சமாக அமையும் என்று முழுமையாக நம்பு. காதல் காதல்னு மனதை குழப்பிக் கொள்ளாமல் நன்றாக கவனமெடுத்து படி. படிப்பதில் மட்டும் கவனம் எடு. நான் உனக்கு நல்ல நண்பியாக இருப்பேன். அது தவிர வேறு எந்த உணர்வும் வேண்டாம்."

அவள் இப்படி மிகவும் அன்போடு விபரித்தாள். அன்றிலிருந்து தினேஷ் வீணான சலனங்களில் இருந்து தன்னை முழுமையாக பேணிக் கொண்டான். மனதை தன் போக்கில் அலைய விடாமல் தவிர்த்துக் கொண்டான். இப்போது அவனால் நிம்மதியாக படிக்க முடிகிறது. இன்று வரையில் ஷாலினி சிறந்த தோழியாக திகழ்கிறாள். தன் முதல் கடமை தன் பெற்றோர்களது கனவை நனவாக்குவது தான் என உறுதி கொண்டான்.

**குறிப்பு:**

மனதில் ஏற்படுகின்ற குழப்பங்களை காதல் என அர்த்தம் கொள்ளாமல் ஷாலினியைப் போன்று செயற்பட்டால் பல சீரழிவுகளை தவிர்க்க முடியும்.

# ரோஜாக் கூட்டம்



ஏ.சீ. ஜரீனா முஸ்தபா

ISBN 978-955-1825-08-9

விலை 150/=